ஞானகுருவின் படைப்புக்கள்

# தமிழர் மதம்தான் மனிதர்களைத் தெய்வமாக்கக் கூடியது




அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,

12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,

**ஞானகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரணோடையில் கோயில் கொண்டருளுபவர்)



மெய்யான இந்துமத ஆண்டு 43,73,123 மார்கழி மாதம்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

# உள்ளுறை

1. **"அருளாட்சி அமைப்புப் பணி"** - அரியலூர் காட்டூரைச் சேர்ந்த சித்தரடியான் திரு கருப்புச்சாமி அவர்களுக்கு குருதேவர் 1989இல் வரைந்த கட்டுரை அஞ்சல்.
2. **"தமிழர் மதம்தான் மனிதர்களைத் தெய்வமாக்கக் கூடியது"** - புள்ளம்பாடி சித்தரடியான் திரு அமிர்தராசு அவர்களுக்கு குருதேவர் வரைந்த செயல் விளக்கத் திருவோலை.
3. **"சிவலிங்கச் சின்னம் உலக மதங்களுக்கெல்லாம் பொதுவான சின்னம்!"** - விரகாலூர் சித்தரடியான் திரு சான் பாசுகோ அவர்களுக்கு குருதேவர் வரைந்த சுருக்க விளக்க மடல்.
4. **"அருட்பணியே அறப்பணி ஆகும்"** - பாளையங்கோட்டை சித்தரடியாள் திருமதி சுப்புலட்சுமி அவர்களுக்கு குருதேவர் எழுதிய அஞ்சல்.
5. **"இந்துமதம் பற்றிய குருபாரம்பரிய வாசகம்"** - பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்கள் இந்துமதம் பற்றி அருளிய குருபாரம்பரிய வாசகம்.

# அருளாட்சி அமைப்புப் பணி

ஓம் தாத்தா கருவூருரே போற்றி!

தலைமைப்பீடம்,
3-7-89.

அருள்மிகு

அரியலூர் சுடலை பத்திரகாளி சன்னிதானம், சிவயோகி, சித்தரடியான் P.கருப்புச்சாமி அவர்கள் சமூகத்திற்கு தலைவர், குருதேவர், குவலய குருபீடம், பரப்பிறம்மம், ஞானச்சாரியார், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் விடுத்துக் கொள்ளும் செயல்விளக்கத் திருவோலை.

(1) பேரன்புக்கும், பெருமதிப்பிற்கும் உரிய திருவருட் செல்வ! தாங்கள் தலைமைப்பீடத்துடன் அடிக்கடி தொடர்பு கொள்ளாவிட்டாலும் தொடர்ந்து அருட்பணி செய்து வருவது குறித்து மிக்க மகிழ்ச்சி. பாராட்டுக்கள். உங்களை வாழ்த்துகிறோம். இப்பொழுது தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் வான், விண், ஆகாயம், ககனம், விசும்பு, பாழ்வெளி, பரவெளி எனும் ஏழிலும் வீரப் பயணம் செய்து அண்டபேரண்ட அரசராகி; இம்மண்ணுலகம் திரும்பி அருளாட்சி அமைப்புப் பணியினை தமது பொறுப்பில் ஏற்றுக் கொண்டு விட்டார்.

அதற்கேற்பவே நமது இயக்கத்தில் உள்ள செயல்வீரர்கள் எல்லாம் நேரடியாகவே அவராலேயே பரிசோதிக்கப்பட்டு; உரிய பக்குவம்

பெருதவர்களுக்கெல்லாம் தற்காலிக ஓய்வும், விடுப்பும், கண்டிப்புக்களையும், தண்டிப்புக்களையும் வழங்கி வருகிறார். அதே நேரத்தில் தங்களைப் போன்று இலைமறை காயாகச் செயல்பட்டு வருகின்றவர்களையும், தலைமைப்பீடத்துடன் தொடர்பில்லாமல் பல்வேறு உலகியல் காரணங்களால் விலகியிருப்பவர்களையும் நேரடியாகவே செய்தி அனுப்பி மீண்டும் இயக்கத்தில் நேரடியாகத் தொடர்பு கொண்டு செயல்படும்படிச் செய்து வருகிறார். இதன்படியே தங்களுக்கும் இப்பொழுது எம் மூலம் செய்தியனுப்புகிறார்.

அதனால், தாங்களும் தங்கள் குடும்பத்தவர்களுடனும், உற்றார் உறவினர், நண்பர்களுடனும், ஊரார்களுடனும், உங்களுக்காக உலகியலில் உள்ள தோழர்களுடனும், தொண்டர்களுடனும் விரைந்து நமது இயக்கத்தில் மாவட்ட அளவில் பெரும் பொறுப்பேற்றுச் செயல்பட வரவேண்டும். வருக! வருக! வருக!

(2) பேரன்புடையீர்! பொருளுலகுக்கும், அருளுலகுக்கும், இயற்கைக்கும், செயற்கைக்கும் ஆணையிடக் கூடிய வல்லமை பெற்ற அண்டபேரண்ட அருட்பேரரசரே தங்களை தங்களுடைய கடந்த காலச் செயல்களையும், தங்களுடைய அருளாற்றல்களையும், ஆர்வங்களையும், தங்களுடைய சுற்றங்களையும் எண்ணிப் பார்த்து திருச்சி மாவட்ட அளவிலும், கிழக்கு மண்டல அளவிலும் பொறுப்புள்ள பதவியேற்றுச் செயல்பட அழைக்கிறார் என்றால்; இதனை கிடைத்தற்கரிய, பெறுதற்கரிய சித்தியாக, முத்தியாக, பேரின்பமாக,.... ஏற்றுக் கொள்ளுங்கள். இனியும் யோசிக்க வேண்டாம்! காலதாமதம் செய்ய வேண்டாம்!

(3) உடனடியாக 4 முழம் சிவப்பு வேட்டி, அதற்கு மேல் 6 (ஆறு) முழத் துண்டு இடுப்புக் கச்சாக, தலையில் 10 (அ) 12 முழ நீட்ட துணி தலைப்பாகையாக இப்போதைக்கு வாங்கி

சித்தரடியாராக அருட்கோலம் பூண்டிடுங்கள். தற்காலிகமாக 6mm அல்லது 10mm இரும்புக் கம்பியில் உங்கள் உயரத்திற்கு திரிசூலம் செய்து கொள்ளுங்கள். முடிந்தால் அதை Electroplating செய்து கொள்ளுங்கள். உங்களுக்குத் தேவையென்றால் தலைமைப்பீடத்திலிருந்து ஒரு மெய்ஞ்ஞானக் கொடி கொண்டு வரப்படும். காணிக்கை ரூ.243லிருந்து ரூ.500 வரை வசதி போல் மெதுவாகத் தரலாம்.

(4) தாங்கள் விரும்பினால் தங்களுக்கு வசதியிருந்தால் மகன் இளவரசுக்கு தனியாகவே திரிசூலம், மெய்ஞ்ஞானக்கொடி வாங்கித் தரலாம். இல்லையெனில் தங்களுடையதை இருவருமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். தங்களுடைய மகன்களில் ஒருவர் திருநிறைச் செல்வன் K. இளவரசு ஏற்கனவே அருளுலக ஒப்புதல்களையும், பயிற்சிகளையும் பெற்று அருள்மிகு செங்களூர் பெரியண்ணசாமி சன்னிதானம் சித்தரடியான் க. இளவரசு என்று பட்டம் பெற்றிருப்பது தங்களுக்குத் தெரியும். எனவே, அத்திருமகனாரைத் தங்களைப் போல் மீண்டும் இயக்கத்தில் செயல்படச் சொல்லுங்கள். அவர் மூலம் ஏராளமான இளைஞர்கள் நமது இயக்கத்தில் சேர்ந்து செயல்படட்டும். அதனால், தங்களுக்கும், தங்கள் குடும்பத்திற்கு வழிவாரிசுகளுக்கும் அருளுலக நன்மைகளும், பயன்களும், பாதுகாப்புக்களும் விளையும். இந்த அஞ்சலை நிறைய Xerox copy எடுத்து கிழக்கு மண்டலம் முழுதும் அனுப்பலாம். அதன்மூலம், தங்கள் பெருமையை அனைவருக்கும் தெரியப்படுத்தி அருளாட்சி அமைப்புப் பணியில் நல்ல தளபதியாகவும், உற்றதுணையாகவும், சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கிடலாம்! விளங்கிடலாம்! விளங்கிடலாம்!

**குறிப்பு:-** அன்புகூர்ந்து இவ்வஞ்சலைத் திரும்பத் திரும்பத் தாங்களும் படியுங்கள்! தங்கள் குடும்பத்தாருக்கும் படித்துக் காட்டுங்கள்.

# அருளாட்சி அமைப்புப் பணியின் செயல்திட்டங்கள்

(1) பேராற்றலும், பேரார்வமும் மிக்க அருள்மிகு அரியலூர் சுடலைபத்திரகாளி சன்னிதானம் P.கருப்புச்சாமி அவர்களே! அருளாட்சி அமைப்பதற்குரிய முயற்சிகள் உலகெங்கும் துவக்கப்பட்டிருந்த போதிலும்; அருளாட்சி தத்துவ வித்துகள் உலகெங்கும் தூவப்பட்டு விதைக்கப்பட்டுவிட்ட போதிலும்; அருளாட்சியின் சித்தாந்த நாற்றுக்கள் உலகெங்கும் ஊன்றப்பட்டு கிளைத்துச் செழித்து வளர்ந்தோங்கிட ஆரம்பித்துவிட்ட போதிலும்; இந்தியாவின் மத்திய அரசின் கருத்திற்கும், கவனத்திற்கும், கண்காணிப்பிற்கும் அருளாட்சி அமைப்புப் பணிக்குரிய நிறுவன நிர்வாகங்களும், செயல்திட்டங்களும், பயிற்சிகளும், முயற்சிகளும் உள்ளாகி விட்டன என்ற போதிலும்; ..... நமது அண்டபேரண்ட அருட்பேரரசர் தாத்தா தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்; 'அருளாட்சியை முதன்முதலில் தமிழகத்திலும், பின் தென்னிந்தியாவிலும், அதற்குப் பிறகு இந்தியாவிலும், அதற்கும் பிறகே படிப்படியாக ஆசியா கண்டத்திலும், உலகெங்கிலும் சிறுகச் சிறுக, படிப்படியாக அடிப்படையோடு நிதானமாக விரிவுபடுத்த வேண்டும்! விரிவுபடுத்த வேண்டும்! விரிவுபடுத்த வேண்டும்! ...' என்று திட்டமிட்டுள்ளார்.

ஏனென்றால், அருளாட்சி என்பது வெறும் கொள்கை அளவிலும், ஏட்டளவிலும் மட்டும் எல்லா இடங்களுக்கும் பரப்பப்பட்டு விடக்கூடாது. அப்படிப் பரப்பப்பட்டு விட்டால், இதுவரை இம்மண்ணுலகில் எண்ணற்ற மதங்களும், சமுதாய அமைப்பு முறைகளும், அரசியல் சட்டதிட்ட அமைப்புகளும், கொள்கை அளவிலும், ஏட்டளவிலும் வகுக்கப்பட்டு, ஏட்டளவில் எழுதப்பட்டு

பல நாடுகளில் பெருமளவில் பரப்பப்பட்டும் கூட மாபெரும் தோல்வியைத்தான் பெற்றிருக்கின்றன. அதனுல், எண்ணற்ற சமுதாயச் சிற்பிகளும், சமூக விஞ்ஞானிகளும், சமய ஞானிகளும், அரசியல் மேதைகளும், வித்தகர்களும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டார்கள்.

ஆனுல், அருளாட்சியைப் பற்றிக் கூறும் **மெய்யான இந்துமதமும்**, இம்மதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களும், நாற்பத்தெட்டு வகை வழிபாட்டுநிலேயங்களும், நாற்பத்தெட்டு வகைக் கருவறைகளும், நாற்பத்தெட்டு வகை வழிபாட்டு நிலேயக் கருவறைகளும், இவற்ருல் வாழையடி வாழையாகத் தோன்றி வரும் நாற்பத்தெட்டு வகை அருட்பட்டத்தவர்களும், பதின்மூன்று வகை சித்தியாளர்களும், மற்ற அருளாளர்களும் இம்மண்ணுலகில் என்றென்றும் செல்வாக்குடன்தான் இருந்து வருகிருர்கள். இதற்குக் காரணமே அருளாட்சித் தத்துவமும், சித்தாந்தமும், கொள்கையும், குறிக்கோளும், செயல்திட்டமும் தமிழ்நாடு என்னும் விதைப்பண்ணேயிலும், நாற்றுப்பண்ணேயிலும் தயாரிக்கப்பட்டு உலகெங்கும் அனுப்பப்படுவதுதான்.

எனவேதான் மீண்டும் இப்பொழுது தமிழகத்தில் தஞ்சைத் தாத்தா அவர்கள் அண்டபேரண்ட அருட்பேரரசராகி அருளாட்சி அமைப்புப் பணியின் பொறுப்புக்களே ஏற்றிருப்பதால்; தங்களேப் போன்ற செயல்வீரர்களேயெல்லாம் அருளாட்சித் தத்துவ வித்துக்களேயும், சித்தாந்த நாற்றுக்களேயும், செயல்திட்ட இளங்கன்றுகளேயும் தயாரிக்கும் நாற்றுப்பண்ணேயாகவும், விதைப்பண்ணேயாகவும் உருவாக்குகிருர்! உருவாக்குகிருர்!! உருவாக்குகிருர்!!! அதாவது, உங்களேப் போன்றவர்கள்தான் தாத்தாவின் அருளாலும், குருதேவரின் கண்காணிப்பாலும் சிறந்த நாற்றுப்பண்ணேகளாகவும், விதைப்பண்ணேகளாகவும் மாறித் தமிழனுக இம்மண்ணுலகில் உள்ளவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்களுக்கு

மேல் நாற்றுப்பண்ணைகளிலிருந்தும், விதைப்பண்ணைகளிலிருந்தும் விதைகளையும், நாற்றுக்களையும் பெற்று தங்களுடைய சிந்தையிலும், நெஞ்சிலும், உணர்விலும், வாழ்விலும் அருட்பயிர் விளைவித்து பசுமைப் புரட்சியினைச் செய்ய வேண்டும்; அந்த பசுமைப் புரட்சியால் விளையும் விளைச்சலைக் கொண்டு அனைத்து வகையான வறுமைகளையும், வெறுமைகளையும் அகற்ற வேண்டும்! அகற்ற வேண்டும்! அகற்ற வேண்டும்! அதன்பிறகுதான், தமிழ்மொழியில் புரட்சி மலரும்! அதன் அடிப்படையில் தமிழினத்தில் மறுமலர்ச்சி ஏற்படும்! அதன் அடிப்படையில் இந்துமதத்திற்கு விடுதலை கிடைத்திடும்! அதன்பிறகு தமிழ்நாட்டில் அருளாட்சி அமைப்புப் பணி வெற்றியடைந்து அருளாட்சி அமைந்திடும்!

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் இன்றைய திருச்சி மாவட்டக் கரூரில் உள்ள அமராவதியாற்றங்கரையில் பசுபதீசுவரர் கோயிலைக் கட்டிய பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் கி.மு. 72லேயே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும், அதன்கீழ் 48 வகையான நிறுவன நிருவாகங்களையும் உருவாக்கி தமிழின மொழி மத விடுதலைக்காகப் பாடுபட ஆரம்பித்திட்டார். அதாவது தமிழினம், மொழி, மதம் ஆகிய மூன்றுமே அன்னியர்களால் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதோடல்லாமல்; தமிழர்களின் அறியாமையாலும், அப்பாவிப் பண்பாலும், ஏமாளித்தனத்தாலும் தொடர்ந்து தமிழர்களின் வாழ்வியலிலேயே அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது, "தமிழின மொழி மத விடுதலை இயக்கம் என்ற ஒன்று தொடர்ந்து போராடித்தான் தமிழினம், தமிழ் மொழி, தமிழர் மதம் என்ற மூன்றையும் ஒரே சமயத்தில் அன்னியர்களிடமிருந்தும், தமிழர்களின் வாழ்வியலிலிருந்தும் விடுதலை செய்திட முயற்சிக்க வேண்டியிருக்கிறது" - என்று பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி மிகத் தெளிவாக கி.மு.72இல் தமது

குருபாரம்பரிய வாசகத்திலும், குருவாக்கிலும், குருவாக்கியத்திலும், குருவாசகத்திலும் கூறியுள்ளார்.

இவற்றை இப்பொழுது குருவாணை வழங்கும் பொறுப்பிலிருக்கும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் தமது எழுத்துக்களிலும், உரையாடல்களிலும், சொற்பொழிவுகளிலும் வெளியிட்டு வருகிறார். நல்லகாலமாக இவ்வரிய கருத்து உங்களுடைய அஞ்சலிலும் இடம் பெறுகிறது. எனவே, தாங்கள் இவ்வஞ்சலை பலருக்கும் படித்துக் காட்டுங்கள். நகலெடுத்து அனுப்புங்கள். முடியவில்லையெனில் Xerox எடுத்தாவது அனுப்புங்கள்.

(2) இந்த அளவு குருதேவர் உங்களுக்கு முதன்மையும், சிறப்பும் கொடுத்து அஞ்சல் விடுத்துள்ளார் என்பதை எண்ணிப் பாருங்கள். இது முதல் தாங்கள் பேரார்வத்துடன் மிகுந்த பொறுப்பேற்று இயக்கப் பணிகளை செயலாக்க முற்படுங்கள். தங்களைப் போல் அந்தந்த வட்டாரங்களில் சிலராவது தங்களுடைய இல்லங்களில் கொடியேற்றி; தங்களுடைய இல்லங்களையே அருட்கோட்டமாகவும், இயக்க அலுவலகமாகவும், தங்களுடைய குடும்பத்தார்களையே அ.வி.தி. பணியாற்றும் அருளாளர்களாகவும், இயக்க அலுவல்களைக் கவனிக்கும் கொள்கைச் செயல்வீரர்களாகவும், தங்களுடைய உற்றார் உறவினர் சுற்றத்தார் ஊரார் ... முதலியோர்களைக் கொண்டே அருட்படைக்குரிய பாடிவீடும், பாசறையும் உள்ள கோட்டையாகவும் கொண்டு செயல்பட ஆரம்பியுங்கள். உங்களுடைய உழைப்பு வீண் போகாது. உங்களுக்கென்று அருளுலகப் பெருமைகளும், உரிமைகளும் உண்டு.

(3) பேராற்றலுடையீர்! முன்பெல்லாம் அருளாட்சி அமைப்புப் பணியென்றால் நோயாளிகளையும், பேயாளிகளையும் நலப்படுத்துவதும்; கோயில், ஆலயம் முதலானவற்றைப் புதுப்பிப்பதும்தான் செயல்திட்டம் என்று எண்ணப்பட்டது. ஆனால், இப்போது அந்த நிலைமை மாறி

சமூக விஞ்ஞானத்தை மெய்ஞ்ஞானத்தின் துணை கொண்டு சமுதாயப் புரட்சிக்குப் பயன்படுத்துவதற்காகத் 'தந்தை பெரியார் திராவிடர் கழகம்' என்ற அமைப்பும்; இந்திய அளவில் **இந்துமதத்**திற்கும் *ஹிந்துமதத்*திற்கும் இடையேயுள்ள ஒற்றுமை, வேற்றுமைகளையும், ஏற்ற ஏமாற்றங்களையும் விரிவாக விளக்கியுரைத்திட 'இந்தியத் தத்துவப் பேரவை' என்ற அமைப்பும்; மதவேறுபாடின்றி அருளாளர்களை எல்லாம் மானுடநல மேம்பாட்டிற்காக ஒன்றுதிரட்டிட 'இந்திய அருளாளர் திருச்சபை' என்ற ஓர் அமைப்பும் உருவாக்கப்பட்டதுடன்; பொதுவாக அருளுலக இருள்களை அநுபவப் பூர்வமாக அகற்றுவதற்காக 'அருட்பணி விரிவாக்கத் திட்டம்' என்ற அமைப்பைப் புதுப் பொலிவோடு புதுப்பித்தும்; உலக மதங்களின் மறுமலர்ச்சிக்காக 'மதம்' என்ற பொதுச் சொல்லால் 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' என்ற பழைய ஆன்மீக அமைப்பை புதியபுதிய சட்டதிட்டக் கட்டமைப்புக்களோடு உருவாக்கியும்; தமிழர்களை மொழி, மதம், சாதி, தாங்கள் வாழும் மாநிலம் நாடு என்ற சூழ்நிலை, தாங்கள் சேர்ந்துள்ள அரசியல் கட்சி ... என்ற குறுகிய எல்லைகளையும், வெறிகளையும் விட்டுவிட்டு ஒன்றுதிரண்டு! ஒற்றுமைப்பட்டு! ஒருமைப்பாட்டுடன்! புதிய பந்தபாசக் கட்டமைப்போடு பெருவீரம் காட்டிச் செயல்படச் செய்வதற்காகத் 'தமிழின மொழி மத விடுதலை இயக்கம்' என்ற ஒன்றை உருவாக்கியும்; இன்றைய அருளாட்சி அமைப்புப் பணி பல்வேறு வகையான வளர்ச்சி நிலைகளைப் பெற்றிருக்கிறது.

எனவேதான், இந்த வளர்ச்சி நிலைகளோடு தங்களை இணைத்துக் கொள்ள முடியாதவர்களையெல்லாம் உடனுக்குடன் தற்காலிகமாக நமது இயக்கங்களின் செயல்நிலைகளிலிருந்து விலக்கி; அவர்களுக்கு ஓய்வளித்து; அவர்கள் மீண்டும் மீண்டும் நாம் இதுவரை அச்சிட்டுள்ளவைகளையும், கையெழுத்துப் பிறதிகளாக வெளியிட்டுள்ளவைகளையும் பொறுப்போடு நிதானமாகப் படித்துப் படித்துத் தங்கள் ஏட்டறிவைத் தெளிவும்,

ஆழமும், அழகும், வலிவும், பொலிவும், வளமும், பயனும் உடையதாக ஆக்கிக் கொள்ளுமாறு பணித்து வருகிறார் அண்டபேரண்ட அருட்பேரரசரான தஞ்சைத் தாத்தா அவர்கள். அவருடைய இந்தப் புதிய ஏற்பாடுகள் நமது இயக்கத்திற்கு நல்ல தெம்பையும், தெளிவையும், வேகமான விரிவான வளர்ச்சிகளையும் வழங்கி வருகின்றன.

அவரே அருளாணை வழங்கித்தான் தங்களைப் போன்று நமது இயக்கங்களின் தத்துவ நீரோட்டங்களோடும், சித்தாந்தத் தேரோட்டங்களோடும் மிகுந்த உயிரோட்டத்தோடு கலந்து கொள்ளப் போதுமான வசதிவாய்ப்பில்லாமல் மயங்கியும், தயங்கியும், ஒதுங்கியிருந்தவர்களையெல்லாம் ஆர்வமூட்டி, நம்பிக்கையூட்டி உடனடியாக நமது இயக்கத்தில் வந்து கலந்து கொள்ளுமாறு செய்து வருகிறார். அதன்படிதான் இந்த அஞ்சல் அனுப்பப்படுகிறது. எனவே, பேரன்பு கூர்ந்து தாங்கள் உடனடியாகப் பேரார்வத்துடனும், பேராற்றலோடும் குருதேவர் விரகாலூர் வட்டாரச் சுற்றுப்பயணத்தை மாபெரும் வெற்றிப் பயணமாக மாற்றிடச் செயலில் இறங்கிடுங்கள். அடுத்தடுத்து, திருச்சி மாவட்டம் முழுவதும் அருட்கோட்டங்களையும்; இ.ம.இ., அ.வி.தி., த.இ.மொ.ம.வி. முதலிய இயக்கங்களின் கிளை அமைப்புக்களையும் உருவாக்குங்கள்.

நமது நிறுவன நிருவாகங்கள் அனைத்துக்குமே ஒரே ஒரு மெய்ஞ்ஞானக்கொடிதான். எனவே, நோயாளிகளுக்கும், பேயாளிகளுக்கும் பரிகாரம் செய்தாலும் சரி; நமது இயக்கக் கிளை அலுவலகங்களை அமைத்தாலும் சரி; ஆங்காங்கே படிப்பகங்களையும்; அருளாளர்களின் பெயரால் மன்றங்களையும், இசை நாடகம் இலக்கியம் ... முதலியவற்றிற்காக தோற்றுவிக்கப்படும் சங்கங்கள் ஆனாலும் சரி; இயக்கத்தில் பேரார்வமுடையவர்களின் இல்லங்களானாலும் சரி; நமது இயக்கத்தவர்கள் அதிகமாக உள்ள ஊரின் பொது இடங்களானாலும்

சரி; மெய்ஞ்ஞானக் கொடி ஏற்றுங்கள். கொடிமரத்தின் அடியிலும், மெய்ஞ்ஞானக்கொடியிலும் சக்கரங்கள் வையுங்கள்.

அதாவது யாராக இருந்தாலும் சரி, எட்ட இருந்தே நமது மெய்ஞ்ஞானக்கொடியைக் கண்ணால் பார்த்து கைகூப்பி வணங்கினாலும் சரி; அல்லது அருகில் வந்து கொடிக்கம்பத்தைத் தொட்டு வணங்கினாலும் சரி; உடனே அவர்களுக்கு அருள்நலம் விளையட்டும்! அருள்நலம் விளையட்டும்! அருள்நலம் விளையட்டும்! அப்போதுதான் சன்னிதான உடை அணியக் கூடிய வீரர்கள் பத்து, நூறு, ஆயிரம் என்று ஒவ்வொரு வட்டாரங்களிலும் பெருகிடுவார்கள். இப்படித் திருச்சி மாவட்டத்தைத் தயாரித்த உடனேயே தங்களின் கீழ் விரைந்து தஞ்சை மாவட்டத்தையும் சேர்த்து கிழக்கு மண்டலத்திற்கு உரிய நிர்வாகக் குழுவை அமைத்து கிழக்கு மண்டலத்தை அருட்படையின் சிறந்த பாசறை வீடுகளில் ஒன்றாக மாற்றுங்கள்.

எப்படியோ கி.பி.1992இல் அருட்போர் ஆரம்பம் ஆகும். இது குருபாரம்பரியக் கணக்கு, தஞ்சைத் தாத்தாவின் அருளாணை, அருளுலகத்தார்களின் ஒப்புதல் பெற்ற செய்தி. இந்த அருட்போர் எவ்வளவு காலம் நடக்கும்? இது நடக்கப் போவது தமிழக எல்லைக்குள் மட்டுமா? அல்லது தென்னிந்தியாவிற்குள் மட்டுமா? அல்லது இந்தியத் துணைக்கண்டத்திற்குள் மட்டுமா?! அல்லது உலகம் முழுவதுமா?! ... என்பது பற்றிய செய்திகள் எதுவும் இதுவரை முறையாகத் தெரிவிக்கப்படவில்லை! தெரிவிக்கப்படவில்லை! தெரிவிக்கப்படவில்லை!

எனவே, தங்களைப் போன்றோர் விரைந்து செயல்பட்டு அந்தந்த வட்டாரம், வட்டம், மாவட்டம், மண்டலம் முதலியவற்றை அருளாட்சி அமைப்புப் பணியில் பெரும்பங்கு வகிக்கக் கூடிய அளவிற்கு எல்லாவகையான ஏட்டறிவு வளர்ச்சிகளையும், பட்டறிவு வளர்ச்சிகளையும், அருட்படைப் பயிற்சி தேர்ச்சி நிலைகளையும் பெற்றிடுமாறு செய்திடல்

வேண்டும்! செய்திடல் வேண்டும்! செய்திடல் வேண்டும்! இக் கருத்து விளக்கங்களே உங்களுக்குத் தஞ்சைத் தாத்தாவால் வழங்கப்படுகின்றன. இதுவே நமது குருதேவர், பரபிறம்மம், நிறையக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், அண்டபேரண்ட அருதி ஆதிசத்திகள் சன்னிதானம், அருட்கொடை வள்ளல், குவலய குருபீடம், ஞானாச்சாரியார், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்களால் குருவாணையாகத் தங்களுக்கு வழங்கப்படுகின்றது.

உணர்ந்தும் உணர்த்தியும் செயல்படுத்துக!

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!
ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**குருவாணை.**
**அன்பு - சித்தர்.**
**தலைவர், குருதேவர், ஞானாச்சாரியார்,**
**குருமகா சன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**
**4 / 7 / 89.**

**<u>திருவோலை நாயகம்:</u>**

அருள்மிகு பச்சைமலை வீரப்பட பத்திரகாளி சன்னிதானம்,
வேம்படிதாளம் இரா.சீனிவாசன்.
4-7-89.

**// குருதேவரின் கையெழுத்தில்... //**

அன்பு மகனே சகதீசா,

கட்டாயமாக அழகிய இரண்டு அல்லது மூன்று பேறு நகல்கள் (படிப்படியாக) சில கார்பன் நகல்கள் எமக்கு விரைந்து தேவை.

உடனே மதுரை வட்டாரம் முழுதும் செல்லுமிடங்களிலும் - படித்துக் காட்டி கேட்பவரிடம் கையொப்பம் பெறவும்.

சைக்கிலோசுடைல் நகலில் பலருக்கும் அனுப்பினல் இது ஓர் அருட்போர் ஆயுதம்; அருட்படை திரட்டும் கருவி.

**குருவாணை**

**அன்பு - சித்தர். 4/7/89.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: வேம்படிதாளச் சித்தரடியான் திரு சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. இறுதியிலும் ஆரம்பத்திலும் குருதேவர் அவர்களின் கையெழுத்து இருந்தது.//**

# தமிழர் மதம்தான் மனிதர்களைத் தெய்வமாக்கக் கூடியது

ஓம்

ஓம் தாத்தா கருவூர்ரே போற்றி!

அருள்மிகு புள்ளம்பாடி உத்தண்ட மாகாளி சன்னிதானம் சித்தரடியான் S.அமிர்தராசு (அகத்தியர் மருத்துவ நிலையம், இரயில்வே நிலைய சாலை, புள்ளம்பாடி Post, இலால்குடி Taluk, திருச்சி Dt. 621711) அவர்கள் சமூகத்திற்கு!

தலைமைப்பீடத்திலிருந்து குருதேவர் விடுத்துக் கொள்ளும் செயல் விளக்கத் திருவோலை!

1) யாவும் அம்மையப்பன்கள் செயலே!

2) தங்களின் 20-7-89 தேதியிட்ட அஞ்சலை இன்று மாலையில் படிக்கக் கேட்டோம்.

3) அன்பு மகனே! தமிழ் ஒரு தெய்வீக மொழி! தமிழர்கள் அனைவருமே தெய்வீகத் தன்மை பெற்றவர்கள்! தமிழ்நாடு ஒரு தெய்வீகத் திருநாடு! தமிழர் மதம்தான் மனிதர்களைத் தெய்வமாக்கக் கூடியது, சாதாரண மனிதர்களை மிக எளிதில் தெய்வங்களோடு தொடர்பு கொள்ளச் செய்வது! ஆனால், தமிழர்களின் அப்பாவிப் பண்பால், ஏமாளிப் போக்கால், காலப்போக்கில் ஏற்பட்ட கோழைப் போக்கால், வரலாற்றுச் சுழற்சிகளால் விளைந்திட்ட அடிமை வாழ்வால், அன்னிய மோக தாகங்களால், வெறிமிக்க கலையுணர்வால் தமிழினம்

அடிமையாகி விட்டது! தமிழ்மொழியும் அடிமையாகி விட்டது! தமிழர் பண்பாடும் அடிமையாகி விட்டது!

இவற்றால் பெரும்பாலான தமிழர்கள் தன்மான உணர்வு, இனமான உணர்வு, மொழியுரிமை உணர்வு, மதப்பற்றுணர்வு, பண்பாட்டுப் பிடிப்புணர்வு, ... முதலியவைகளை யெல்லாம் மிகமிக நலிந்து மெலிந்து சாகின்ற நிலையை அடையப் பெற்றவர்களாகி விட்டார்கள். இப்படிப்பட்ட நிலைகள் ஏற்படும் போதெல்லாம்தான்; பதினெண்சித்தர் பீடாதிபதி தோன்றி இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவிக்கிறார்கள்.

இந்த இயக்கத்தின் கீழுள்ள 48 வகையான நிறுவன நிருவாகங்களுள் ஒன்றான 'அருட்பணி விரிவாக்கத் திட்டம்' என்பதின் மூலம் அருளை அநுபவப் பொருளாக வழங்கி நோயாளிகளையும், பேயாளிகளையும் நலப்படுத்தியும்; கருகுலம், குருகுலம், தருகுலம், திருகுலம் என்ற நான்கு வகையான நிறுவனங்களின் மூலம் பிறர்க்கு அருளை வழங்கும் வல்லமை பெற்ற அருளாளர்களான சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் என்ற **'முத்தரத்தார்களை'** உருவாக்கியும்; 48 வகையான கருவறைகளையும், 48 வகையான வெட்டவெளிக் கருவறைகளையும், 48 வகையான வழிபாட்டு நிலையக் கருவறைகளையும் புதுப்பித்து அருளுலக இருளகற்றும் பணியைத் துவக்கியும்; 'தமிழின மொழி மத விடுதலை இயக்கம்' என்ற ஒன்றினைத் துவக்கி அதன்மூலம் தமிழின உணர்வு, மொழியுணர்வு, மத உணர்வு என்ற மூன்றினைத் தட்டியெழுப்பியும் செயல்பட்டிடுவார்கள்.

அப்படி பத்தாவது (கி.மு.100 முதல் கி.பி.150 வரை), பதினோராவது (கி.பி.785 முதல் கி.பி.1040 வரை) பதினெண்சித்தர் பீடாதிபதிகள் செயல்பட்டிட்டதால்தான்; இன்றைக்கும் தமிழ்நாடு என்ற வடிவமைப்பும், தமிழ் இனம் என்ற தெய்வீக இனமும், தமிழ்மொழி என்ற அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியும், தமிழர் மதம்

என்ற பதினெண்சித்தர்களுடைய சித்தர்நெறியான சீவநெறியெனும் மெய்யான இந்துமதமும் வாழுகின்றன! வாழுகின்றன!! வாழுகின்றன!!! வாழ முயலுகின்றன! இந்தக் காலக்கட்டத்தில்தான் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாக யாம் தோன்றி கடந்த 53 ஆண்டு காலமாகவே இலைமறைகாயாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

எம்மால் எண்ணற்றோர் உருவாக்கப்பட்டும் அவர்களில் பலரும் கருத்துக் கண்ணிழந்த குருடர்களாக மாறிவிட்ட காரணத்தினால் மந்திரவாதிகளாகவும், தன்னல வெறி பிடித்த சமூக நல விரோதிகளாகவும், துரோகிகளாகவும் மாறி மாறி, ... தேவையான வளர்ச்சியைப் பெற முடியாமல் வீணாகி விட்டார்கள். எனவேதான், இப்பொழுது யாமே ஊர் ஊராகக் கிராமம் கிராமமாகச் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு; தங்களைப் போன்ற அருளாற்றல் உள்ளவர்களையெல்லாம் தேர்ந்தெடுத்து அருட்பட்டங்கள் வழங்கி உங்கள் மூலம் எல்லாக் கருவறைகளையும் புத்துயிர்ப்புச் செய்தும்; நமது அருளூறு இந்துமத இலக்கியங்களை மக்கள் மீண்டும் செவியறிவாகவும், ஏட்டறிவாகவும் பெற்று மகிழும்படிச் செய்தும்; அருட்கோட்டங்களை ஆங்காங்கே அமைத்து அவற்றின் மூலம் ஏழை எளிய பாமர பாட்டாளி மக்களை நாள், கோள், மீன், மந்திரவாதிப் பாதிப்புக்களிலிருந்து விடுவித்துக் காப்பாற்றியும்; சமய சமுதாய விழிச்சியையும், எழிச்சியையும் உண்டாக்கி வருகிறோம்! உண்டாக்கி வருகிறோம்!! உண்டாக்கி வருகிறோம்!!!

4) அன்பு மகனே! அருள்மிகு உத்தண்ட மாகாளி சன்னிதானம் அமிர்தராசே! யாம், அல்லும் பகலும் அயராது இலைமறை காயாகப் பாடுபட்டு உருவாக்கி வரும் சமய சமுதாய விழிச்சியாலும், எழிச்சியாலும்தான் இன்றைக்கு உலகம் முழுதுமுள்ள தமிழர்களிடையே; 'தான் ஓர் தமிழன்' என்ற தன்னுணர்வும்; தனது தாய்மொழியான தமிழ்மொழி மனிதர்களைக் கடவுள்களோடு எளிதில் அறிமுகப்

படுத்தவும், மனிதர்களையே கடவுளாக மாற்றவும், இயற்கையையே வென்றடக்கவும் ஆற்றல் பெற்ற ஓர் அழிவற்ற அமுதச் செந்தமிழ் மொழி என்ற தாய்மொழிப் பெருமித உணர்வும்; **'தன்னுடைய தாய்நாடு தமிழ்நாடு, அது கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டத்தின் தொடர்ச்சியான நாடு'** என்ற தனது நாட்டின் பழம்பெருமையை எண்ணி தாய்நாட்டின் பற்றுணர்வையும்; **'தனது தமிழ்ப் பண்பாடும், நாகரிகமும் நான்கு உகங்களாக (*{கி.பி. 1989ஆம் ஆண்டு வரை}* 43,73,090 ஆண்டுகள்) இருந்து வரக்கூடிய ஒன்று'** என்ற பண்பாட்டுப் பிடிப்புணர்வையும், நாகரிகப் பிடிப்புணர்வையும்; **'தன்னுடைய மதமான பதினெண்சித்தர்களுடைய, அல்லது பதினெண்சித்தர்கள் தோற்றுவித்த சித்தர்நெறி எனும் சீவநெறியான இந்துமதத்தில்தான் கடவுள்கள் நேரடியாக 64 தடவைகளுக்கு மேல் வந்து திருவிளையாடல் புரிந்தும்; 9 தடவை மண்ணுலகிலேயே பிறப்பெடுத்தும்; 63 நாயன்மார்களும், 12 ஆழ்வார்களும் தோன்றியும்; காலங்கள் தோறும் நாடெங்கும் சித்து விளையாடல்காரர்களும், சீவன்முத்தர்களும், அருளாளிகளும், மருளாளிகளும், ஞானிகளும், தவசிகளும், மகான்களும் தொடர்ந்து வாழ்ந்து கொண்டும்; ... இருக்கின்ற அருளுலகின் வளமிக்கப் பசுமையான நிலை இருக்கின்றது'** என்பதை எண்ணி மத உணர்வையும் பெற்றிருக்கின்றார்கள்! பெற்றிருக்கின்றார்கள்!! பெற்றிருக்கின்றார்கள்!!!

இவற்றிற்கெல்லாம் மேலாக; எம்மால் உருவாக்கப்பட்ட, **ஆயிரமாயிரம் சித்தரடியான்களும், சித்தரடியார்களும், சித்தரடியாள்களும்** குமரி முதல் இமயம் வரை காடு, மலை, நாடு, நகரம், பேரூர், சிற்றூர், குக்கிராமம், பாழிடம், ஆற்றிடைக் குறை, ... முதலிய இடங்கள் அனைத்தும் சென்று எழுப்பிய ஓமத் தீ, ஓகத் தீ, யாகத் தீ, யக்ஞத் தீ, வேள்வித் தீ முதலியவைதான் **இந்துமதத்திற்கு ஏற்பட்டிருந்த இன்னல்களையும், இடர்பாடுகளையும், பழிநிலைகளையும் எரித்துச் சாம்பலாக்கியதோடு இந்துமதத் துறையில் ஆங்காங்கே கவிழ்ந்திருந்த காரிருளையும் ஓட்டின! ஓட்டின!! ஓட்டின!!!**

இம் மாபெரும் சாதனைகளையெல்லாம் எண்ணி எண்ணி அகம்பாவமோ, ஆணவமோ அடையாமல் அடக்கமாகவும், அமைதியாகவும், நிதானமாகவும்தான் செயல்படுகிறோம் யாம். எனவேதான் யாம் தங்களைப் போன்று துடிதுடிப்பு மிக்க, பேரார்வமிக்க, செயல்வீரம் மிக்க இளைஞர்கள் செயல்படுவதற்காக எம்மிடம் ஓடோடி வந்தாலும் உடனே உங்களைப் போன்றவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைத்துச் செயல்பட அனுமதிக்காமல் **ஒருமுறையாவது உங்களைப் போன்றவரின் வட்டாரங்களில் சுற்றுப்பயணம் வந்து உங்களுடைய குடும்ப நிலை, உறவு நிலை, ஊரார் நிலை, உங்களின் செல்வாக்கு நிலை, உங்களுடைய சாதனை நிலை, ... முதலியவைகளைக் கண்டறிந்தும், விசாரித்து அறிந்தும்தான் உரிய பொறுப்புக்களை ஒப்படைக்கும் முறையினை மேற்கொண்டிருக்கிறோம் யாம்.** அதாவது இந்த பேருண்மையைக் கட்டாயமாக நீங்களும், உங்களுடைய வட்டாரத்தார்களும், குறிப்பாக விரகாலூர் வட்டாரத்தார்களும் புரிந்து கொண்டேயாக வேண்டும்! புரிந்து கொண்டேயாக வேண்டும்!! புரிந்து கொண்டேயாக வேண்டும்!!!

அப்போதுதான், நீங்களும் உங்களைப் போன்ற பலரும், 'எல்லாம் வல்ல சித்தர்', 'முக்காலமும் உணர்ந்தவர்', 'குவலய குருபீடம்', 'பரப்பிறம்மம்' என்ற அரிய பெரிய நிலைகளைப் பெற்ற நமது தலைவர் விரகாலூர் வட்டத்துக்கு ஏன்? நம் போன்றவர்களில் ஒருவரைத் தலைவராகப் போடாமல் ஒரு சிறுபெண்ணைத் தலைவராகப் போட்டார்??? என்று இன்னும் தொடர்ந்து கேள்வி எழுப்பிப் புலம்பிக் கொண்டிருப்பது நிற்கும்! நிற்கும்! நிற்கும்!

5) அன்பு மகனே! நமது இயக்கம் ஓர் அருளுலக இயக்கம்! நமது இயக்கம் சாதாரண மானுடர்களால் புரிந்து கொள்ள முடியாத தாத்தாக்களும், ஆத்தாக்களும் வழங்கக் கூடிய ஆணைகளாலும்; அம்மையப்பன்கள் வழங்குகின்ற துணைகளாலும்தான் நடைபெறுகின்றது!

நடத்தப்படுகின்றது. எனவே, தலைமைப்பீடத்திலிருந்து **'அருளாணை'** என்ற பெயரிலோ அல்லது **'குருவாணை'** என்ற பெயரிலோ வழங்கப்படும் சட்டதிட்டங்களையும் விதிகளையும் அப்படியே முழுமையாக ஏற்றுச் செயல்படுத்த வேண்டியவர்களே நமது இயக்கத்தவர்களும், ஆதரவாளர்களும். இதன்படிதான், விரகாலூர் வட்டாரத்துக்கு தலைவர் பெண் என்றோ அல்லது சிறு வயதினர் என்றோ எண்ணிப் பாராமல் அருளுலகின் ஆணைப்படி அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் சன்னிதானம் சமுத்திரவள்ளியையே நியமித்தோம் யாம். அடுத்து நமது இயக்கத்திலுள்ள ஒவ்வொருவரும் தங்களைத் தலைவராகவே எண்ணிப் பொறுப்புடனும், சுறுசுறுப்புடனும் செயல்படக் கற்றுக் கொள்ள வேண்டும்.

மேலும், இன்றைக்கு அருளாட்சி அமைப்புப் பணிக்காகப் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக வந்திருக்கும் யாம் குருதேவர் என்ற நிலையில் **'ஒரு தத்துவ நாயகமாகவும், ஓர் அருட்கொடை வள்ளலாகவும்தான் செயல்படுகிறோம்.'** அதாவது, நம் நாட்டை இந்துமதம் என்ற தத்துவம்தான் ஆள வேண்டும்; இந்துமதத்தின் அருளார்ந்த செயல்நிலைகள்தான் மக்களைக் காக்க வேண்டும் என்பதே அருளாட்சி ஆகும். அதுவே தமிழின மொழி மத விடுதலை இயக்கத்தின் குறிக்கோளும், கொள்கையும் ஆகும். அதுவே, இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் செயல் சித்தாந்தமாகும். எனவேதான் யாம் உருவாக்கியுள்ள சன்னிதானங்கள் அனைவருமே; தங்களைக் குருதேவரின் பதிலியாக தங்களுக்குள் குருதேவர் வாழ்வதாக உணர வேண்டும்! ஒப்புக் கொள்ள வேண்டும்! நம்பிச் செயல்பட வேண்டும்!

அதாவது நமது சன்னிதானங்களுக்கு இடையில் ஒருவரையொருவர் சன்னிதானம் என்று மரியாதையோடு அழைத்துத்தான் பழகிக் கொள்ள வேண்டும். எவருக்கிடையிலும் எக்காரணம் பற்றியும்

காரசாரமான அல்லது மரியாதைக் குறைவான சொல் பரிமாற்றங்களே நிகழ்ந்து விடக் கூடாது! நிகழ்ந்து விடக் கூடாது!! நிகழ்ந்து விடக் கூடாது!!! என்பதுதான் இந்துமத அருளுலகத் தத்துவம். அதாவது, **'அருளுலகப் பயிர்களை விளைவிக்கும் உழவர்களே நமது சன்னிதானங்கள்'**. இந்தத் தத்துவம் அல்லது இந்தப் பேருண்மை இந்துமதத் தலைவர்களாலும், தொண்டர்களாலும், பத்தர்களாலும் மறக்கப்பட்டும், துறக்கப்பட்டும், மறுக்கப்பட்டும், எதிர்க்கப்பட்டும், செயல்நலம் குன்றியதால்தான் இந்துமதம் இருளையும், இடர்களையும், இன்னல்களையும், சிதைவுகளையும், இழிவுகளையும் ஏற்க நேரிட்டது. ஆனால் **இனியும் அந்த நிலை இருக்கக் கூடாது என்பது மட்டுமல்ல, இனியும் அந்த நிலை வரவே கூடாது என்பதுதான் நாம் எடுக்கக் கூடிய முடிவு.**

6) அன்பு மகனே! புள்ளம்பாடி வட்டாரத்துக்கு இ.ம.இ.க்கு உன்னைத் தலைவனாக அறிவித்திருக்கிறோம். நீ விரைந்து இ.ம.இ.யின் கீழ் 32 அமைப்புக்களைத் தோற்றுவிக்க வேண்டும். ஒவ்வொரு நிறுவனத்திலும் மூன்று பதவிகள் உண்டு. ஆக இ.ம.இ.யின் கீழ் 96 பேர்கள் பதவி ஏற்பார்கள். இவர்கள் அனைவரும் மாதம் ரூ. 5/- செலுத்தும் இ.ம.இ. உறுப்பினர்களாகவும், மாதச் சந்தா ரூ. 2/- செலுத்தும் தமிழின மொழி மத விடுதலை இயக்க உறுப்பினர்களாகவும் இருக்க வேண்டும். இவர்களை வைத்துக் கொண்டு வாரம் ஒருமுறை அல்லது அமாவாசை, முழுநிலவு நாளில் பொதுக் குழுக் கூட்டம் மாதம் நான்குமுறை அல்லது இருமுறை நடத்தப்படுவதாக இருக்க வேண்டும். இது பற்றிய செயல்திட்டம் அனுப்பப்படும். தங்களைப் போலவே இ.ம.இ. வட்டாரத் தலைவர் உருவாக வேண்டுமானால் நான்கைந்து கிராமங்களை இணைத்து ஒரு கிராமத்தை முதலாவதாகக் கொண்டு ஒரு தலைவரை உருவாக்குங்கள். மேலும், இதுபற்றி விவரம் தேவையானால் தலைமைப்பீடத்தோடு தொடர்பு கொள்ளவும்.

7) உங்களுடைய வசதி வாய்ப்புக்களுக்கேற்ப மெய்ஞ்ஞானக்கொடி ஏற்றி உங்கள் உயரத் திரிசூலம் வைத்து யாகசாலை அமையுங்கள். வேறு எந்த ஊரிலும் (அருகே) யாகம் நடக்காத தினமாகப் பார்த்து யாகம் செய்யவும். தனவள நெல்லூரில் யாகம் செவ்வாய்க் கிழமையில் நடைபெறுவதால் வேறு கிழமையில் யாகம் செய்யவும். விரகாலூரில் ஞாயிறன்று நடைபெறும் சுடலைப் பூசைக்குச் செல்லவும். இதுபோல் நீங்கள் துவக்கிச் செயல்பட இருக்கும் யாகசாலைக்கும் அனைவரையும் அழைத்துச் செயல்படுங்கள். யாகத்தில் தருவதற்கு முடிகயிறு, தாயத்து விரைவில் அனுப்பப்படும். உடனே விரிவான, விரைவான பதில் தேவை. **எல்லோருடனும் சேர்ந்து செயல்படுங்கள்; எல்லோரையும் சேர்த்துச் செயல்படுங்கள்**.

**குருவாணை.**

**பதினெண்சித்தர் மடம், பீடம், கருகுலம்.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாக இருந்தது. யாருடைய கையெழுத்து என்று தெரியவில்லை.//**

# சிவலிங்கச் சின்னம் உலக மதங்களுக்கெல்லாம் பொதுவான சின்னம்!

30-6-89,
தலைமைப்பீடம்.

அருள்மிகு சித்தரடியான் J.சான் போசுகோ (விரகாலூர் S.O., இலால்குடி Tk, திருச்சி Dt. - 621711.) அவர்கள் சமூகத்திற்கு;

1) நலம்! நலமுண்டாகட்டும்!

2) தங்களின் 27-6-89 தேதியிட்ட உள்நாட்டு அஞ்சலை குருதேவருக்குப் படித்துக் காண்பித்து, அவர் கூறிய செய்திகளை அப்படியே எழுதுகிறோம். நன்கு படித்துப் புரியுங்கள்.

3) தாங்கள் இயக்கத்தில் நெடுநாட்களாக உள்ளீர்கள். ஆனால், இன்று வரை இயக்க உறுப்பினராகவில்லை. நமது இயக்கமும், தத்துவமும், குருதேவரும் இந்த மண்ணுலகை விட மூத்தவை, முதன்மையானவை! உலகிலுள்ள அனைத்து மதங்களுக்கும் தாயானவை, கருவானவை சித்தர்கள் தோற்றுவித்த மெய்யான இந்துமதம்.

4) மின்சாரத்தினால் எப்படிப்பட்ட வண்ண விளக்குகள் வேண்டுமானாலும் எரியும்; எந்த அளவிலும் சிறிய பெரிய மின்விசிறிகள் ஓடும்; அடுப்புக்கள் எரியும்; இரயில் வண்டித் தொடர் ஓடும்; ஆலைகள் இயங்கும். ஆனால் மின்சாரம் ஒன்றுதான். அதுபோல் எத்தனை ஆயிரமாயிரம் மதங்கள் இருந்தாலும் அருள் ஒன்றுதான். அந்த அருளை கல்லுக்கும், மண்ணுக்கும், பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும், ... தரக்கூடிய வல்லமை பெற்ற, வல்லமை மிக்க அருட்கொடை வள்ளல்களே பதினெண்சித்தர் பீடாதிபதிகள்,

பதினெண்சித்தர்கள், 48 வகைச் சித்தர்கள்.... இந்த அருளுலகப் பேருண்மையை உணர்ந்தும், உணர்த்தியும் செயல்பட வேண்டியவர் நீங்கள். இன்னும் இ.ம.இ.யில் உறுப்பினராகவில்லை. இது வருந்துவதற்குரியது. இதனால், சட்டப்பூர்வமாக இயக்கத்துக்குள் செல்வாக்கு இல்லாமல் போய்விடுவீர்கள். (You will lose your seniority.) எனவே, இயக்கத்தில் உறுப்பினராகச் சேருங்கள். குருதேவரை வரவேற்க மும்முரமாகப் பம்பரமாகச் சுழன்று செயல்படவும். நீங்கள் உங்கள் வட்டாரத்தில் ஞானக்கொடிகளைப் பரவலாக ஏற்றுங்கள். முன்னணி வீரராகச் சுறுசுறுப்புடன் விரைந்து செயல்படுங்கள்.

5) சிவப்புத் துணியில் உள்ள சிவலிங்கச் சின்னம் ஆவி, ஆன்மா, ஆருயிர் பற்றி விளக்கக் கூடியதாகும். மேலும், அது அருளுலகத்தின் சின்னம். உலக மதங்களுக்கெல்லாம் பொதுவான சின்னம். அதுதான் தீய சத்திகள் அனைத்தையும், மந்திரவாதிப் பாதிப்பு, நாள் கோள் மீன் பாதிப்பு, ... முதலியனவற்றைத் தடுத்து நிறுத்தி அடித்து விரட்டி ஓட்டிவிடும். எனவே, நீங்கள் கட்டாயமாக உங்கள் பாதுகாப்புக்கும், பிறரின் பாதுகாப்புக்கும் ஞானக்கொடி பல இடங்களில் ஏற்றியேயாக வேண்டும். 2-7-89 ஞாயிறன்று தென்மண்டல நிர்வாகக் குழுவைச் சந்திக்கத் தயாராகுங்கள். அதுவே சிறந்த பயனைத் தரும். குடும்பத்தார்க்கு அன்பைக் கூறுங்கள். அனைவரோடும் இணைந்து செயல்படுங்கள்.

உடன் பதில்.

**அன்பு**
**தலைமைப்பீடம்,**
**பதினெண்சித்தர் மடம் பீடம் கருகுலம்,**
**தலைமைப்பீட அலுவலகம்,**
**30-6-89.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சோ. இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# அருட்பணியே அறப்பணி ஆகும்.

13-7-89,

தலைமைப்பீடம்.

திருமதி சுப்புலெட்சுமி அவர்கள் சமூகத்திற்கு (34-A, விநாயகர் தெரு, பாளையங்கோட்டை Post, நெல்லை - 627002.);

1) தாங்கள் அனுப்பிய ரூ.101/- M.O. மூலம் இன்று கிடைத்தது. நன்றி! இத்துடன் அருளூறு பூசனைப் பொருட்கள் அனுப்பியுள்ளோம். விரைவில் எல்லா நகல்களும் அனுப்புகிறோம். பைண்டிங் செய்த எல்லா நகல் புத்தகங்களும் அனுப்புவோம். அவற்றைப் படித்து 'Mirror', 'Caravan', 'Illustrated Weekly', 'Sunday Times', ... முதலிய இதழ்களுக்கு நமது இயக்கம் பற்றியும், குருதேவர் பற்றியும், அருட்பணி பற்றியும், தமிழ்மொழி பற்றியும், தமிழ் மதம், **மெய்யான இந்துமதம்**, *பொய்யான ஹிந்துமதம்* பற்றியும், சமசுக்கிருத மொழிக் கொடுமை, பிரமண ஆரிய மாயை, பிரமணர்களின் சுரண்டல், மூடநம்பிக்கை ஏமாற்று, புராண இதிகாச ஆபாசங்கள், பொய்கள், புளுகுகள், ... முதலியவை பற்றிக் கட்டுரை எழுதுங்கள்.

உங்களுடைய பெயரை கட்டுரையின் கீழ் போட யோசித்தாலும் The Pathinen Siddhar Mutt, Head Office, 13, Kumarasamy Muthali Street, Ambattur, Madras - 53 என்ற முகவரியிட்டு எழுதி அனுப்பவும். எந்தக் கட்டுரை அனுப்பினாலும் அவற்றை டைப் செய்து ஒன்றை தலைமைப்பீடம் அனுப்பவும். ஏனெனில், பத்திரிகைக்காரர்கள் அச்சில் இடா விட்டாலும், தலைமைப் பீடத்தில்

அச்சிடுவோம். இதுவே தாங்கள் இயக்கத்திற்கும், குருதேவருக்கும் செய்யும் தொண்டு.

2) உயர்திரு திருவாட்டி S. சுப்புலட்சுமி நாச்சியார் அவர்களே! உங்களுக்கு அருள்மிகு நெல்லை காந்திமதி அம்மன் சன்னிதானம் என்று அருட்பட்டம் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய அருட்பட்டங்கள் உங்களை நேரில் கேட்டு வழங்கப்படும். திருச்சி மாவட்ட இ.ம.இ. அமைப்பு தலைவராக K. சமுத்திரவள்ளி என்ற இளம்பெண்ணை நியமித்தது போல், நெல்லை மாவட்ட இ.ம.இ. அமைப்புக்கு உங்களைத் தலைவராக நியமித்துள்ளோம். தாங்கள் புரிந்து செயல்பட வேண்டும்.

<u>குறிப்பு:-</u>

**a)** இந்த அருட்பணியை மறுக்காமல், மறக்காமல் அறப்பணியாக ஏற்றுக் கொள்ளவும். இதுவே, உங்கள் வாழ்வின் இலட்சியமாக இருக்கட்டும்.

b) இ.ம.இ.க்கு கீழ்தான் அனைத்து வகையான (48) நிறுவன நிருவாகங்களும் இருக்கின்றன. எனவே, இ.ம.இ.யின் தலைவியாகிய தங்களுக்குத்தான் அனைத்து வகையான அஞ்சல்களும் அனுப்பப்படும். மற்றவர்கள் தங்களிடம் வந்து தெரிந்து கொள்ளட்டும். எல்லோரும் தங்கள் வழிகாட்டலின் கீழ் செயல்படட்டும். அதற்கு இதுவே குருவாணை! இக் குருவாணை இன்றைக்கு அருளாட்சி நாயகமாக இருக்கின்ற அண்டபேரண்ட அருட்பேரரசர் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் அருளாணைப்படி வழங்கப்பட்டிருக்கின்றது. எனவே, இது பற்றி யாரும் விமரிசிக்கக் கூடாது. கடுமையான **எச்சரிக்கை!**

3) நெல்லையில் உள்ள மூன்று சன்னிதானங்களையும் அழைத்து இவ்வஞ்சலைப் படித்துக் காட்டி அது முதல் இயக்க நடவடிக்கைகள்

அனைத்தும் தாங்கள் அல்லது தங்கள் தங்கையின் கணவர் அல்லது இரு குடும்பங்களுள் யாராவது ஒருவர் அல்லது தங்களால் நம்பிக்கையாகப் பதிலியாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய ஒருவர் துணையோடுதான் எந்தக் கோயில் பூசையானாலும், எந்தப் பரிகாரப் பூசையானாலும், **எந்தச் சுற்றுப்பயண நிகழ்ச்சியானாலும், எந்தப் புத்துயிர்ப்பு நிகழ்ச்சியானாலும், எந்தக் குடும்ப விழா நிகழ்ச்சியானாலும், எந்த நிதி வசூலானாலும், வேறு எந்தச் செயலானாலும்,... நிகழ்த்தப்படல் வேண்டும்! நிகழ்த்தப்படல் வேண்டும்! நிகழ்த்தப்படல் வேண்டும்! நிகழ்த்தப் பட்டேயாக வேண்டும்! அதுதான் இ.ம.இ.யையும், அதன் கீழுள்ள நிறுவன நிருவாகங்களையும் வலிமைப்படுத்தும்! வளப்படுத்தும்! புதிய புதிய கட்டமைப்புகளோடு வளர்ச்சி பெறச் செய்யும். இதனை எல்லோரும் புரிந்து விருப்பத்தோடு செயலாக்க வேண்டும்! செயலாக்க வேண்டும்! செயலாக்க வேண்டும்! செயலாக்கியே தீர வேண்டும்!**

**குறிப்பு:-** பேரன்பு கூர்ந்து இந்த அருளாணையையும், குருவாணையையும் நன்கு **உணர்ந்தும், உணர்த்தியும்** செயல்படுக! செயல்படுக! செயல்படுக!

4) நான்கு யுகமாகச் சுடலையாக இருந்து எல்லாவகையான அருளுலகத் தகுதிகளையும் பெற்றிருப்பதுதான் வெள்ளக் கோயில் சுடலை. எனவே, வேலி அடைத்திருந்தாலும் முறையாக அங்குச் சென்று உரியவரிடம் அனுமதி பெற்று எல்லாப் பரிகாரமும் செய்யவும். இதுவே, தங்களுக்குரிய **குருவாணை**.

5) நமது பத்தமடை சன்னிதானம் அவர்களின் உண்டியலை தங்கள் வீட்டில் பூசை செய்து திறந்து எண்ணி M.O. மூலம் அல்லது டிராப்ட் மூலம் தலைமைப்பீடம் அனுப்பவும். மற்றபடி இரு சன்னிதானங்கள் இ.பூவலிங்கம், இ.வைத்தியலிங்கம் இருவரிடமும் இ.ம.இ. சந்தா M.O. அல்லது டிராப்ட் மூலம் அனுப்பவும். விவரத்தை அஞ்சல் மூலம் எழுதவும்.

**குறிப்பு**:- மேற்படி மூவருக்கும் அஞ்சல் எழுத ஓய்வு இல்லாத காரணத்தினால்தான் தங்களை அருளுலகத்திற்குப் பயன்படுத்துவதன் மூலம் தங்கள் குடும்பத்திற்கும், தங்களின் தங்கையின் குடும்பத்திற்கும் தேவையான பரிகாரங்களை அதிகப் பொருட்செலவு இல்லாமல் எளிதில் அருளுலகத்தாரின் அறிமுகம் மூலம் செய்ய விரும்புகிறார்! செய்ய விரும்புகிறார்! செய்ய விரும்புகிறார்! குருதேவர். எனவே, குருதேவரைப் புரிந்து தங்கள் இரு குடும்பத்தாரும் மெய்யான தூய பத்தி உணர்வோடும், அளப்பரிய பேரார்வத்தோடும் இக் குருவாணையை நிறைவேற்ற முற்படுங்கள்! முற்படுங்கள்! முற்படுங்கள்! குருதேவர் செல்வி சுபப்பிரியாவுக்கும், மற்ற இரு செல்வங்களுக்கும் வாழ்த்துக் கூறுகிறார். தங்கள் தங்கை குடும்பத்துக்கும் வாழ்த்துக் கூறுகிறார். வாழ்க! வளர்க! வளம் பெறுக!

**அன்பு**
**சித்தர்,**
**13-7-1989.**

*அன்புடையீர்!*

*தலைமைப்பீடம் உத்தரவுப்படி இந்த நகல் தங்களுக்கு அனுப்பப்படலாகிறது.*

*இவண்,*
*S.சுப்புலட்சுமி,*
*பாளை.*

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: பாளையங்கோட்டை திருமதி சுப்புலட்சுமி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# இந்து மதம் பற்றிய குருபாரம்பரிய வாசகம்

[கி.மு 70இல் அமராவதி ஆற்றங்கரையில் உள்ள பசுபதி ஈசுவரர் ஆலயத்தைக் கட்டிய 10வது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரர் அவர்கள் பதினெண்சித்தர்களுடைய "சீவ நெறி"யான "சித்தர் நெறி" எனும் இந்து மதத்தை ஏறத்தாழ நான்கு யுகங்கள் கடந்து மீண்டும் மக்களுக்குக் கருத்து விளக்கச் சுருக்க வாசகங்கள்; நீண்ட விரிவுரைகள்; கருவாக்கு, கருவாக்கியம், கருவாசகம், குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம், தருவாக்கு, தருவாக்கியம், தருவாசகம், திருவாக்கு, திருவாக்கியம், திருவாசகம், அருள்வாக்கு, அருள்வாக்கியம், அருள்வாசகம், மருள்வாக்கு, மருள்வாக்கியம், மருள்வாசகம் எனும் 18 வகையான நூல்களின் மூலமும்; வாழையடி வாழையாக ஒவ்வொரு பீடாதிபதியும் மரபு வழியாகத் தொடர்ந்து எழுதும் குருபாரம்பரியம் எனும் மதவரலாற்று தொடர் நூலின் மூலமும் விளக்கங்கள் கொடுக்க ஆரம்பித்தார்]

"இந்து மதம் என்பது வெறும் வரலாறு மட்டுமல்ல! புராண இதிகாசங்கள் மட்டுமல்ல! கதைகளை மட்டும் கொண்டதல்ல! அற்புதங்களைச் செய்த சித்துவிளையாடல்காரர்களால் உருவாக்கப்பட்டது அல்ல! மந்திர மாயங்களால் உருவாக்கப்பட்டது அல்ல! நரகத்தைக் காட்டி அச்சுறுத்தியும், சொர்க்கத்தைக் காட்டி இச்சுறுத்தியும் பிறந்ததல்ல! வளர்ந்ததல்ல! வாழ்ந்ததல்ல! புரியாத மொழிகளில் தெரியாதவைகளைக் கூறி மக்களைக் குருடராக்கிடும் பணியில் ஈடுபட்டதல்ல! மூடநம்பிக்கைகளையும், கண்மூடிப் பழக்கவழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டதல்ல! எந்தத் தனியொரு திருத்தோன்றலையோ (அவதாரங்கள்) அடிப்படையாகக் கொண்டதல்ல! எந்த ஒரு தனிப்பட்ட நூலாலும் அல்லது வேதத்தாலும் வாழ்வதல்ல! எந்த ஒரு தனிப்பட்ட கடவுளையோ, கோயிலையோ புகழ்ந்து வாழுவதல்ல! வளருவதல்ல! அது முழுக்க முழுக்க தத்துவ ஞானிகளையும், தத்துவங்களையும் (The philos-

ophers and the Philosophies); சித்தாந்திகளையும், சித்தாந்தங்களையும் (The Theologists and the Theologies); வேதாந்திகளையும், வேதங்களையும், (The Vedics and the Vedas); விஞ்ஞானிகளையும், விஞ்ஞானங்களையும் (The Scientists and the Sciences); கலைஞர்களையும், கலைகளையும் (The Artists and the Arts); அருளாளர்களையும், அருள்துறைகளையும் (The Divinators and the Divine Fields); கோயில்களையும், கோயில் விஞ்ஞானங்களையும் (The Temples and the Temple Sciences); இவற்றிற்கெல்லாம் மேலாக கணக்கற்ற கோடிக்கணக்கான தேவர்கள், தேவியர்கள், தேவதைகள், கடவுள்கள், தெய்வங்கள், ஆண்டவர்கள், பட்டவர்கள், எல்லாக்கள், இயவுள்கள், இறைகள், ..... என்று பட்டியலிட முடியாத அருளுலகத்தவர்களையும்; வகைவகையாகக் கொண்டு, 1359 அண்டபேரண்டங்களிலும் பரவி இருப்பதுதான் இந்து மதம் .... அதாவது ஏட்டறிவின் மூலம் மட்டும் இந்து மதத்தை அறிந்து கொள்ள முடியாது, குருவழியாகப் பெறக்கூடிய பட்டறிவாலும், தானே பெறக் கூடிய பயிற்சிகளாலும்தான் இந்து மதத்தைப் படிப்படியாக உணர முடியும்! உணர முடியும்!! உணர முடியும்!!!”

இதுதான் 10வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரரின் குருபாரம்பரிய வாசகம்.

**பதினெண்சித்தர் மடம் பீடம் கருகுலம்,**
**தலைவர், குருதேவர், ஞானாச்சாரியார்,**
**இந்துமதத் தந்தை, அருளாட்சி நாயகம்,**
**இந்து மறுமலர்ச்சி இயக்கம்.**

***நகல் நல்குபவர்:*** தலைமைப்பீட அலுவலர் குருமார் இரா. வெங்கடேசன், 22-6-89 நள்ளிரவு.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: வேம்படிதாளம் சித்தரடியான் திரு இரா. வெங்கடேசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# கொள்கையும் குறிக்கோளும்

இந்து மதம் என்பது இந்தியாவின் மதம் என்பதே சித்தர்களின் கருத்து. அதாவது சித்தர் நெறியே "உலக முதல் நெறி", "தாய் நெறி". எனவே இதன் செயலாக்கமே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் அமைப்பும், கொள்கையும், குறிக்கோளும் ஆகும்.

"உலக மதங்கள் அனைத்தும் ஒரு தாயின் மக்களே" என்ற பேருண்மையை நிலைநாட்டி இதன் மூலம் உலக மத ஒற்றுமை, இணைப்பு, பிணைப்பு, நல்லுறவு, நட்பு, தோழமை, ... முதலியவைகளைச் செழித்தோங்கச் செய்வதே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கையும் குறிக்கோளும் ஆகும்.

மதத்தின் பெயரால் போட்டி, பொறாமை, சண்டைச் சச்சரவு, தீண்டாமை, மொழி வெறி, இன வெறி, சாதி வெறி, வட்டார வெறி, நாட்டு வெறி முதலியவை மறைமுகமாகத் தலைவிரித்து பேயாட்டம் போடுவதை, வெறியாட்டம் ஆடுவதைத் தடுப்பதே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கை, குறிக்கொள், செயல்திட்டம்.

**//இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கை விளக்கம் என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட வாசகங்கள்.//**








தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 – 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் <u>குருவாணைப்படி</u> இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

"இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்."

\- குருபாரம்பரிய வாசகம்.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609
at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://books.gurudevar.org
https://gurudevar.in https://gurudevar.org
https://induism.org Email: indhuism@gmail.com

காணிக்கை: ரூ.10/-